**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 266**

**மாவட்டச் செயலகம், வவுனியா**

வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்களின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010

## 1. மாவட்டச் செயலகத்தின் முக்கிய பணிகள்

- அரசாங்கப் பணிகளை ஒருங்கிணைத்தலும் மாவட்ட மற்றும் கிராமிய மட்டத்தில் காணப்படும் நிறுவனங்கள், உத்தியோகத்தர்கள் ஊடாக சட்டத்தினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளைப் ஆற்றுதலும்.
- ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் முகவராக செயற்படுதல்
- வருமானத்தினை சேகரித்தல்
- பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்
- மாகாணசபைக்கு அதன் செயற்பாடுகளில் உதவுதல்

## 2. மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

- வவுனிய வடக்கு
- வெங்கல செட்டிக்குளம்
- வவுனியா
- வவுனியா தெற்கு சிங்கள

## 3. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மாவட்டச் செயலகம் கணக்காண்டின் ஆரம்பத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்குகள்

### 4.1 மொத்த ஏற்பாடும், செலவினமும்

வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் 04 பிரதேச செயலங்களிற்கான மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 139,800,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 137,729,813 பயன்படுத்திக்

கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் மாவட்டச் செயலகத்தின் தேறிய சேமிப்பு ரூபா 2,070,187 அல்லது 1.48 சத வீதமாக காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | மொத்த மதிப்பீட்டு ஏற்பாடு | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | மொத்த தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவரும் | 96,750,000 | 96,750,000 | 94,891,705 | 1,858,295 | 1.92 |
| மூலதனம் | 43,050,000 | 43,050,000 | 42,838,108 | 211,892 | 0.49 |
| மொத்தம் | **139,800,000** | **139,800,000** | **137,729,813** | **2,070,187** | **1.48** |

## 4.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகளின் பயன்படுத்துகை

பல்வேறு நோக்கங்களிற்காகவும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களிடமிருந்து கீழே காட்டப்பட்டவாறு கிடைத்திருந்த நிதி ஏற்பாடுகளின் மொத்தம் ரூபா 166,424,325 ஆனதுடன் அவ் ஏற்பாடுகளின் பயன்படுத்தல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு இலக்கம் | ஏற்பாடுகள் கிடைத்திருந்த அமைச்சு/திணைக்களம் | ஏற்பாடுகள் | உண்மையான செலவினம் | சேமிப்புகள்/மிகைகள் (2010 திசெம்பர் 31 இல்) |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| 101 | சமய மற்றும் காலாசார அலுவல்கள் அமைச்சு | 250,000 | 250,000 | - |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 8,536,596 | 8,535,986 | 610 |
| 110 | நீதி மற்றும் சட்ட மீளமைப்பு அமைச்சு | 68,400 | 31,160 | 37,240 |
| 118 | விவசாய அபிவிருத்தி மற்றும் கம நல சேவைகள் அமைச்சு | 70,000 | 53,464 | 16,536 |
| 120 | சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டுகை அமைச்சு | 4,352,995 | 4,309,338 | 43,657 |

| | | | | |
|---|---|---|---|---|
| 121 | பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 10,768,610 | 10,742,205 | 26,405 |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 4,822,915 | 4,130,209 | 692,708 |
| 127 | தொழிலாளர் உறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு | 33,000 | 30,061 | 2,939 |
| 133 | விஞ்ஞான கைத்தொழில் அமைச்சு | 236,430 | 223,782 | 12,648 |
| 145 | மீள்குடியேற்ற அமைச்சு | 25,701,956 | 25,645,099 | 56,857 |
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 909,500 | 827,196 | 82,304 |
| 201 | பௌத்த மத அலுவல்கள் திணைக்களம் | 2,507,465 | 2474,770 | 33,695 |
| 206 | கலாச்சார அலுவல்கள் அமைச்சு | 4,150 | 4,150 | - |
| 210 | அரசாங்க தகவல் திணைக்களம் | 38,000 | 36,650 | 1,350 |
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் | 294,080 | 276,007 | 18,073 |
| 217 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் | 585,300 | 583,125 | 2,175 |
| 218 | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 52,686,415 | 47,230,315 | 5,456,100 |
| 226 | கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் | 1,500,000 | 1,500,000 | - |
| 252 | தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் | 819,430 | 527,637 | 291,793 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 51,895,083 | 51,462,381 | 432,702 |
| 254 | பதிவாளர் நாயகத் திணைக்களம் | 24,500 | 20,047 | 4,453 |
| 307 | மோட்டார் போக்குவரத்து அமைச்சு | 319,500 | 281,568 | 37,932 |
| | | 166,424,325 | 159,175,150 | 7,249,175 |

## 4.3 கணக்காய்வு மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லை

வவுனியா மாவட்டச் செயலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பதிவேடுகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், ஏடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் அடங்கலான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(I) ஆம் உறுப்பிரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு

அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை.

## 4.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்பிரைகள் மற்றும் பொது நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களிற்கு அமைவாக பேணுதல், தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலிற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக உள்ளார். மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும், அமுலாக்கலும், அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரிப்பதும் இப் பொறுப்பினுள் உள்ளடங்கும்.

## 4.5 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வவுனியா மாவட்டச் செயலகத்தின் நிதிக் கணக்குகள் மற்றும் புத்தகங்களிற்கு அமைய அமைய கீழ் வரும் (அ) தொடக்கம் (இ) ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 4.6 தொடக்கம் 4.9 வரையிலான பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர, வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### (அ). கணக்குகளைச் சமர்ப்பித்தல்

மாவட்டச் செயலகத்தினால் 2011 மார்ச் 31 அளவில் பின்வரும் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு இலக்கம் | கணக்குகளின் பெயர் |
|---|---|
| 266 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 26601 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு |

**(ஆ) கட்டுநிதிக் கணக்கு**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கில் ரூபா 28,113 தீர்க்கப்படாத உப கட்டுநிதி அறிவிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள் கணக்கிணக்கக் கூற்று**

(i) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள் கணக்கு கணக்கிணக்கக் கூற்றின் படி 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாயிருந்த மீதிகளின் மொத்தம் ரூபா 1,094,102 ஆக இருந்ததுடன் நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுதல் மீதான நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருக்கக் காணப்பட்டன.

(ii) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிப் புத்தகத்தின் படி நிலுவைக் கடன் மீதிகள் ரூபா 32,492,871 ஆக இருந்ததுடன் வவுனியா மாவட்டச் செயலக புத்தகங்களின் படி அம் மீதி ரூபா 32,458,071 ஆக காணப்பட்டமையால் காட்டப்பட்டிருந்த ரூபா 34,800 வேறுபாடு கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபையினை நடாத்தல்**

நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களினால் வருடாந் பொருட் கணிப்பீடு நடாத்தப்பட வேண்டிய போதிலும் வவுனியா பிரதேச செயலகத்தினால் 2010 ஆம் ஆண்டிற்காக பொருட் கணிப்பீடு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியில் நிலவிய தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 274,398 ஆகும்.

## 4.7 இணங்கி ஒழுகாமைகள்

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்கி ஒழுகாமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இனங்கி ஒழுகாமை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) சுற்றறிக்கை ஏற்பாடுகள் | | |
| திறைசேரிச் சுற்றறிக்கைகள் | | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | கணனிகள், துணைச் சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| 2006 மார்ர் 24 ஆந் திகதிய 28 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பெறுமதியினை மதிப்பிட முடியாதுள்ளது. | 2010 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய 438 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | - | வெண்கல செட்டிக்குளம் பிரதேச செயலகத்திலுள்ள பயன்படுத்த முடியாத விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | - | 2010 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 1990 ஒக்தொபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 1,308,448 | அரசாங்க அங்கீகரிக்கப்பட்ட இயந்திரப் பொறியியலாளரின் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாது வாகன திருத்தத்திற்காக ரூபா 1,308,448 செலுத்தப்பட்டிருந்தது. |

## 4.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

**சீராக்கலிற்கான மீதிகள்**

மாவட்டச் செயலகம் மற்றும் நான்கு பிரதேச செயலகங்களினால் 2010 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்களின் பகுப்பாய்வில் ரூபா 468,045 பெறுமதியான 29 காசோலைகள் வழங்கப்பட்டும் ஆறு மாதங்களிற்கு மேலாக கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்தன..

## 4.9 மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையும் வெற்றடங்களும்

2010 திசெம்பர் 31 இல் இருந்தபடி பதவியணியினர் நிலைமை பின்வருமாறிருந்தது.

| ஊழியர் வகை | அங்கீரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட மட்டம் | 6 | 5 | 01 |
| (ii) இரண்டாம் மட்டம் | 34 | 28 | 06 |
| (iii) ஆரம்ப மட்டம் | 10 | 09 | 01 |
| (iii) ஏனையோர் | 04 | 04 | - |
| மொத்தம் | 54 | 46 | 08 |